بسم اللہ الرحمن الرحیم    نحمدہٗ ونصلّی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 50

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

14 ரபீவுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 12 ஃபதஹ் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
12 டிசம்பர் 2019


**அல்லாஹ்வின் கட்டளை**

فَاِذَا عَزَمۡتَ
فَتَوَکَّلۡ عَلَی اللّٰہِ ؕ
اِنَّ اللّٰہَ یُحِبُّ الۡمُتَوَکِّلِیۡنَ ○

பின்னர் நீர் (எது பற்றியும்) உறுதியான முடிவு எடுத்து விட்டால், அதனை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் தன்னை நம்பியிருப்பவர்களிடம் உறுதியாக அன்பு கொள்கிறான். (3:160)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## நமது நபி (ஸல்) அவர்களை விட உலகத்தில் மிக மேலான முழுமை பெற்ற ஒருவரின் முன்மாதிரி உலகத்தில் இல்லை. மேலும் கியாமத் வரை வரவும் முடியாது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட எளிமை

திருக்குர்ஆனை படித்துப் பாருங்கள். நமது நபி (ஸல்) அவர்களை விட உலகத்தில் மிக மேலான முழுமை பெற்ற ஒருவரின் முன்மாதிரி உலகத்தில் இல்லை. மேலும் கியாமத் வரை வரவும் முடியாது. பிறகு பாருங்கள்! அவர்களுக்கு ஆற்றல் வழங்கப்பட்ட பிறகும் கூட அவர்களிடம் எப்போதும் எளிமை வெளிப்படவே செய்தது. அன்னார் மீண்டும் மீண்டும் اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثۡلُکُمۡ (18::111) என்று கூறி வந்தார்கள்.

எதுவரை என்றால் ஏகத்துவ சொற்களில் தமது எளிமைப் பற்றி வெளிப்படுத்தியவாறு அதனை ஏற்றுக் கொள்வதை ஒரு அங்கமாக ஆக்கினார்கள். அதனை ஏற்றுக் கொள்ளாமல் முஸ்லிம் முஸ்லிமாக ஆக முடியாது. சிந்தித்துப் பாருங்கள். எந்த நிலையில் வழிகாட்டியும், முழுமை பெற்றவருடைய வாழ்க்கை நமக்கு இந்த பாடத்தை தரக்கூடியதாக இருக்கின்றதோ, அதாவது

இந்த உயர்வான அந்தஸ்தை அன்னார் பெற்ற பிறகும் எளிமையை அன்னார் ஒருபோதும் கை விட்டுவிடவில்லை. வேறொருவர் தொடர்பாக இவ்வாறு எண்ணுவதும், இத்தகைய விஷயங்களை உள்ளத்தில் ஏற்படுத்துவதும் வீணானதாகும்.

உண்மையான விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் ஆற்றல்கள் எண்ணிலடங்காதவையாகும். அதனை நம்மால் கணக்கிட முடியாது. மனிதன் எந்த அளவுக்கு இறையச்சம் மற்றும் முயற்சியை மேற்கொள்வானோ அந்த அளவுக்கு அல்லாஹ்விற்கு அருகில் அவன் செல்கின்றான்...

மேலும் அல்லாஹ்வும் அவன் அருகில் செல்கின்றான். எதுவரை என்றால் அவனுடன் உரையாடுகின்றான். மேலும் அவனது துஆவிற்கு பதிலளிக்கின்றான். இன்னும் சொல்வதென்றால், இதை விட அதிகமாக தனது இருப்பை பல்வேறு வகைகளில் அவன் வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.

இந்த தொடர்பு மற்றும் நெருக்கத்தின் சரியான உதாரணம் இவ்வாறு இருக்கின்றது. அதாவது ஒரு இரும்பை ஏதாவதொரு நெருப்பில் வைக்கும்போது அது அதன் தாக்கத்திற்கு ஆளாகி சிவப்பு நிற நெருப்பாக ஆகி ஒரு துண்டைப் போன்று காட்சியளிக்கிறது. அப்போது ஒரு நெருப்பைப் போன்று அது பிரகாசிக்கின்றது. அதனுள் நெருப்பின் தன்மை காணப்படுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் அந்த இரும்பு நெருப்பாகவோ அல்லது நெருப்பின் துண்டாகவே இருப்பதில்லை.

இதேபோன்றுதான் நமது அனுபவத்தில் ஏற்பட்ட விஷயம் இதுவாகும். அதாவது இறை அடியார்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தில் மிக உயர் அந்தஸ்தை அடைகின்றனர். எவ்வாறு நெருப்பு இரும்பை தன்னுள் ஈர்த்துக் கொள்கின்றதோ மேலும் அதில் வெளிப்படையாக நெருப்பைத் தவிர வேறு எதுவும் தென்படுவதில்லையோ அதேபோன்றுதான் வெளிப்படையாக அந்த மனிதன் இறை பண்பின் வண்ணத்தை தன்னுள் ஏற்படுத்திக் கொள்கின்றான்.

அப்போது அவனிடமிருந்து எத்தகைய செயல்கள் வெளிப்படுகின்றது என்றால், மேலும் அவனது நாவிலிருந்து எத்தகைய விஷயங்களை வெளிவருகின்றதென்றால் அவன் எவ்வாறு கூறுகின்றானோ அவ்வாறே ஆகி விடுகின்றது.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கை மற்றும் நாவுகளினால் எத்தகைய செயல்கள் வெளிப்பட்டுள்ளன என்பதைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

مَا رَمَیۡتَ اِذۡ رَمَیۡتَ وَلٰکِنَّ اللّٰہَ رَمٰی (8:18)

இதேபோன்றுதான் சந்திரன் பிளப்பது, நோயாளிகளை குணப்படுத்துவது ஆகிய அற்புதங்களும் அடங்கும். இதேபோன்று திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனுடன் இருந்த நெருக்கத்தைப் பற்றி مَا یَنۡطِقُ عَنِ الۡہَوٰی அதாவது அவர் (தமது சொந்த) விருப்பத்தின்படி பேசவில்லை (53:4) என்று கூறுகின்றான். இது அன்னாருடன் இருந்த உயர்வான நெருக்கத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயர்வான தூய்மைப்படுத்தும் ஆன்மா மற்றும் அல்லாஹ்வுடனான நெருக்கத்தின் ஒரு ஆதாரமாக விளங்குகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 100–103 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் பாக்கி வைப்பதில்லை மாறாக அதிகப்படுத்தி திருப்பித் தருகின்றான்**

**அல்லாஹ்வின் வழியில் நல்லெண்ணத்துடனும், தூய செல்வத்தையும் செலவு செய்யும்போது அது ஆயிரம் மடங்கு அதிகமாகக் கூட திருப்பிக் கிடைக்கலாம். மேலும் கிடைக்கவும் செய்கின்றது**

**அல்லாஹ் உண்மையான நம்பிக்கையாளர்களைப் பற்றி, அவர்கள் அல்லாஹ் தன்மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக அவனது வழியில் செலவு செய்கின்றனர் என்று கூறுகின்றான்**

**அல்லாஹ் ஒருபோதும் அநீதி இழைப்பதில்லை. மனிதன்தான் பல்வேறு தவறான செயல்களை செய்து, அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்படாமல் தன்மீதே அநீதி இழைத்துக் கொள்கின்றான். மேலும் அவன் இழப்பை ஏற்படுத்திக் கொள்கின்றான்**

**அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வியக்கத்தக்க மக்களை வழங்கியுள்ளான். இவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் தமது வாழ்நாளில் இவ்வாறு கூறினார்கள்: இத்தகைய மக்கள் எவ்வாறு தியாகங்கள் செய்கின்றனர் என்ற முன்மாதிரியைப் பார்த்து எனக்கு வியப்பு ஏற்படுகின்றது**

**உலகம் பௌதீகத்தில் மூழ்கியுள்ளது. மேலும் இறைவனை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் அல்லாஹ் அஹ்மதிகளை தனது அருளால் அருள்பாலித்து தனது இருப்பை வெளிப்படுத்தியவாறு அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவத்தையும் அவர்கள் மீது வெளிப்படுத்துகின்றான்**

**தியாகம் செய்த இந்த அனைவரது பொருளிலும், உயிரிலும் அல்லாஹ் எண்ணற்ற பரக்கத்தை செய்வானாக**

**தஹ்ரீகே ஜதீதின் 85 ஆம் ஆண்டு நிறைவடைந்தது மற்றும் 86 ஆவது ஆண்டு ஆரம்பமானது தொடர்பான அறிவிப்பு**

**முழு உலகிலும் வசிக்கின்ற பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த அஹ்மதி ஆண்கள், பெண்கள், குழந்தைகள், புதிய அஹ்மதிகள் ஆகியோர் செய்த தியாகங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட இறை அருட்கள் தொடர்பான நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 08 நவம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

لَيْسَ عَلَيْكَ هُدٰىهُمْ وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ يَّشَآءُ

وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِأَنْفُسِكُمْ وَمَا تُنْفِقُوْنَ إِلَّا ابْتِغَآءَ

وَجْهِ اللّٰهِ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ إِلَيْكُمْ وَأَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

இதன் பொருள்: அவர்களை நேர்வழிக்குக் கொண்டு வருவது உமது பொறுப்பல்ல. அல்லாஹ் தான் விரும்புபவரை நேர்வழியில் கொண்டு வருகிறான். சிறந்த பொருளை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். உண்மையில் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடி செலவு செய்தீர்கள் எனில் அதன் இலாபம் உங்களுக்கே கிடைக்கும். நல்ல பொருளை நீங்கள் செய்தால் அது முழுக்க முழுக்க திருப்பித் தரப்படும். உங்கள் மீது அநீதியிழைக்கப்படாது. (2:273)

இந்த வசனத்தில் அல்லாஹ் வாக்களித்தது போன்று நேர்வழி காட்டுவதும், சரியான வழியில் எடுத்துச் செல்வதும், அதன் பக்கம் நடத்திச் செல்வதும், அவரை சரியான இலக்கில் கொண்டு சேர்ப்பதும், அந்த வழியில் – அந்த நேர்வழியில் நிலைநிறுத்துவதும், இலக்கு வரை கொண்டு சேர்ப்பதும், வழிதவறுவதிலிருந்து காப்பாற்றுவதும், நல்ல முடிவை அடையச் செய்வதும் ஆகியவை அல்லாஹ்வின் அருளையே சார்ந்துள்ளது. இது அல்லாஹ்வின் பணியேயாகும். நாம் ஒருவருக்கு நேர்வழி காட்டலாம். ஆனால், அதில் அவரை கண்டிப்பாக நடக்க வைக்க முடியாது; அதன் மீது நிலைத்து நிற்கச் செய்யவும் முடியாது. இந்தப் பணியை அல்லாஹ் தன் பொறுப்பில் வைத்துள்ளான். அல்லாஹ்வின் பக்கம் செல்ல முயற்சி செய்கிற மனிதன், அந்த வழியில் செல்ல முயற்சியும் செய்கிறான்; துஆவும் செய்கிறான் எனில் அல்லாஹ்வின் அருளால் அவர் இலக்கைச் சென்று அடைகிறான்.

இதற்கு அவசியமானது நாம் நேர்வழி பெற்ற பிறகு அந்த நேர்வழியில் அல்லாஹ்வினால் கூறப்பட்ட வழிமுறையின்படி செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர் அதற்காக துஆவும் செய்ய வேண்டும். துஆ செய்தவாறு அதில் நிலைத்து நின்றவாறு அவனது அருளை வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் நல்ல முடிவு ஏற்பட வேண்டும். நமது பலவீனம் அல்லாஹ்வின் பக்கம் செல்லும் வழியில் தடையாக நிற்கக் கூடாது என்று வேண்ட வேண்டும்.

இரண்டாவது விஷயமாக அல்லாஹ் இந்த வசனத்தில் கூறியது நீங்கள் நல்ல பொருள்களிலிருந்து எவ்வளவு செலவு செய்தாலும் அது உங்கள் நன்மைக்கே ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்: வமா துன்ஃபிகூ மின் கைரின் ஃபலி அன்ஃபுஸிகும்

எந்த நல்ல பொருளை செலவு செய்தாலும் அதன் பயன் உங்களுக்கே ஏற்படும். அல்லாஹ் அதனை வீணாக்குவதில்லை. மாறாக, மேலும் அதிகமாக்கி திருப்பித் தருகிறான். எவ்வாறு எனில் ஒரு விவசாயி வயலில் விதையை விதைக்கிறார் எனில் அறிவற்ற குறைமதியாளர், இவர் என்ன செய்கிறார்? எல்லா விதையையும் நிலத்தில் எறிந்து விட்டாரே? என்று நினைக்கலாம். ஆனால் அறிவுள்ளவர் இந்த விதை பூமியில் விதைக்கப்பட்டது. அது ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான விதைகளாக வெளிப்படும். அந்த விளைச்சல் ஏதாவது விபத்தைச் சந்தித்தால் தவிர – அவ்வாறு ஆகி விட்டால் ஒன்றும் கிடைக்காது என்று அறிகிறார். அல்லாஹ்வின் வழியில் நல்ல எண்ணத்துடன் தூய பொருளிலிருந்து செலவு செய்யப்படுகிறது எனில் ஆயிரம் மடங்கு அதிகமாகக்

கிடைக்க முடியும்; கிடைக்கிறது. அஹ்மதிகள் தமது அனுபவத்தை எழுதுகிறார்கள். எவ்வாறு நாங்கள் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்தோம்? எவ்வாறு அதனை அதிகமாக்கித் தந்தான் என்று வெளிப்படுத்துகின்றனர். சில பலவீனமான ஈமான் கொண்டவர்கள் இருக்கிறார்கள். புதிதாக பைஅத் செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் கூட அனுபவம் பெறுகிறார்கள். எந்த அளவுக்கு இது உண்மை என்றும், அதிமாக்குகின்றான் என்றும் அனுபவம் பெறுகிறார்கள்.

பிறகு அல்லாஹ் அவர்களின் ஈமான் வளர்வதற்காகவும் அருள் செய்கிறான். ஆனால் பெரும்பாலார் அல்லாஹ்வின் இந்த செயலைப் புரிகிறார். வமா துன்ஃபிகூட இல்லப்தி காஅ வஜ்ஹில்லாஹ் – அல்லாஹ்வின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள் செய்கின்றனர் எனில் மார்க்கத்தின் தேவைக்காக செலவு செய்கின்றனர் எனில் அவர்கள் அல்லாஹ்வின் கவனத்தை ஈர்ப்பதற்காகச் செலவு செய்கின்றனர். அல்லாஹ் உண்மையான முஃமீனின் வரையறையாக இதனைத்தான் கூறுகிறான். அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செலவு செய்கின்றனர் எனில் அல்லாஹ் அத்தகையோரின் நிலைமைகளை நன்கறிகின்றான். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செலவு செய்பவர்களை அறிகிறான்.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெற செலவு செய்பவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பார்க்கின்றனர். எவ்வாறு அல்லாஹ் அவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொண்டு திருப்பித் தருகிறான் என்று பார்க்கின்றனர். பிறகு இது அவர்களின் ஈமானை மேலும் அதிகமாக்குகிறது. எனவே நான் அதனை வீணாக்குவதில்லை என்ற அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் எனது கவனத்தை ஈர்ப்பதற்காக உங்கள் தூய பொருளிலிருந்து எனது மார்க்கத்திற்காக நான் கூறியதற்கிணங்க செலவு செய்கிறீர்கள். பிறகு நான் அதனை திருப்பித் தருவேன். நிபந்தனை என்னவெனில் பொருள் தூய்மையானதாக இருக்க வேண்டும்.

சில முன்னேறிய நாடுகளில் வசிப்பவர்கள் குறிப்பாக இதனைக் கவனத்தில் கொள்ளுங்கள். தூய பொருளை சம்பாதியுங்கள். நீங்கள் சம்பாதிக்கவும் செய்து கொண்டு பிறகு அரசிடம் தவறான விளக்கம் கொடுத்து உதவித் தொகையும் பெற்றவாறு அரசாங்க அமைப்புகளை ஏமாற்றாதீர்கள். அவ்வாறு செய்பவர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படாத தொகையையும் பெறுகின்றனர். குடிமகன் என்ற முறையில் அரசுக்குக் கொடுக்க வேண்டிய வரியையும் வழங்குவதில்லை. மற்ற மக்களின் உரிமைகளையும் பறிக்கின்றனர். அந்தத் தொகை நாட்டின் வளர்ச்சிக்காக செலவு செய்யப்படலாம். அது தடைபடுகிறது. எல்லாவற்றினும் அதிகமாக தவறான விளக்கம் தருவதால் பொய் கூறிய பாவம் வருகிறது. இவை அனைத்தும் தவறானதும், பாவமும், தூய பொருளிலிருந்து விலக்கி வைப்பதும் ஆகும்.

பிறகு தூய பொருளுடன் வேறு வழியில் சம்பாதித்த பொருள்களும் கலந்து விடுகிறது. அப்பணியை அல்லாஹ் தடுத்தும் இருக்கிறான் எனில் அவ்வழியில் சம்பாதித்த பொருள் தூய பொருள் ஆகாது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் கூறுகிறான்: தூய பொருள்களிலிருந்து எனது கவனத்தை ஈர்ப்பதற்காக தரப்பட்ட பொருள்களை ஏற்றுக் கொள்வது மட்டுமின்றி யுவஃப்ப இலைக்கும் – முழுக்க முழுக்க திருப்பித் தந்து விடுகிறேன். பல்வேறு வழிகளில் திருப்பித் தருகிறேன். அல்லாஹ் எவருக்கும் அநீதியிழைப்பதில்லை. மனிதன்தான் தவறான பணிகள் செய்து தவறான விளக்கம் தந்து அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்படாமல் தம்மீதே அநீதியிழைத்துக் கொள்கிறான். நஷ்டம் ஏற்படுத்திக் கொள்கிறான்.

அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுபவர்கள் மற்றும் அல்லாஹ்வின் இந்த செயல் பற்றி அனுபவம் பெற்றவர்களாக ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் அஹ்மதிகள் உள்ளனர். அவர்களுள் ஒரு சிலரின் உதாரணத்தை நான் எடுத்து வைக்கிறேன். இந்தத் தியாகத்தின் காட்சியை நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தில் பார்க்கிறோம் எனில் அதனை இப்போதும் காண முடிகிறது. முற்காலத்தில் மட்டும் நடைபெற்றவை அல்ல. எவ்வாறான தியாகங்களை, அதிருப்திகரமான சூழல் நிலவும் நிலையிலும் கூட அல்லாஹ்வின் கவனத்தைப் பெறுவதற்காகவும், அவனது திருப்தியைப் பெறுவதற்காகவும் அஹ்மதிகள் செய்கின்றனர்.

இன்று குத்பாவில் தஹ்ரீகே ஜதீதின் புதிய நிதியாண்டினைத் தொடங்கி வைக்க வேண்டியுள்ளது. எனவே இந்த அடிப்படையில் சில சம்பவங்களை எடுத்து வைக்கிறேன்.

சிரோலியோன் முபல்லிக் எழுதுகிறார்: லோன்சோ மண்டலத்தைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த கமாரா சாஹிபிற்கு தஹ்ரீகே ஜதீது பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சந்தாக்களின் பரக்கத்துகள் எடுத்துக் கூறப்பட்டதும் இந்த புதிதாக பைஅத் செய்தவர் சந்தாக்களை வழங்கியதுடன் தஹ்ரீகே ஜதீது சந்தாவும் வழங்கினார். அவரிடம் சிறிது தொகை எஞ்சியிருந்தது. அதன் மூலம் அரிசி வாங்க முடியும். ஏழை மனிதர்ஆவார்.

ஆனால் அந்தத் தொகையையும் அவர் தஹரீகே ஜதீதில் செலுத்தி விட்டார். சில நாட்கள்தான் கழிந்திருந்தது. அம்மனிதர் திரும்பி வந்தார். நான் தஹ்ரீகே ஜதீது வழங்கிய நாளின் மறுநாள் கம்பெனி என்னை வேறு துறைக்கு மாற்றியது. புதிய துறையில் எனது சம்பளம் இரு மடங்காகி விட்டது. மற்ற சலுகைகளும் அதிகமாக இருந்தது என்று கூறுகிறார். இந்தப் பரக்கத்துகள் சந்தாக்களின் பரக்கத்தால் ஏற்பட்டது என்றார். நான் அவற்றைக் கூறியிருந்தேன். அதன் ஒரு பொலிவை அவரிடமும் காட்டினான். இனி ஒவ்வொரு மாதமும் சந்தா ஆம் உடன் சேர்த்து தஹ்ரீகே ஜதீதும் கூட தருவேன் என்று கூறினார்.

பிறகு சிராலியோனின் லோன்சா மண்டலத்தின் முபல்லிக் கூறுகிறார்: அதுவும் ஒரு சம்பவம் ஆகும். ஏழ்மை இருந்த நிலையிலும் கூட தியாகம் செய்பவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு வழங்குகிறான்! பிறகு இது அவர்களின் ஈமான் அதிகரிக்கவும் காரணமாக அமைகிறது.

சம்பவம் இவ்வாறாகும்: சாண்டா மபுல்லன் தவ்ரோ என்ற கிராமம். இதில் முஹம்மது சாஹிப் ஓர் அஹ்மதி இருந்தார். இவர் தஹ்ரீகே ஜதீதில் ஒரு தொகையை வாக்குறுதியாக எழுதியிருந்தார். அது அவரால் தர முடியாத தொகையாக இருந்தது. வருட இறுதி வந்தது. என்னிடம் சில டம்ளர் அரிசையத் தவிர வேறு எதுவும் இல்லை என்றார். சிறிது அரிசி ஒரு கிலோ அல்லது ஒன்றரை கிலோ இருக்கலாம். அவர் அந்த அரிசியை விற்று வாக்குறுதியை செலுத்தினார்.

அவர் கூறுகிறார்: அதற்கு மறுநாள் எனது தூரத்து உறவினர் எனக்கு 100 கிலோ அரிசியும் சிறிது தொகையும் அன்பளிப்பாக அனுப்பினார். இதனால் எனது ஈமான் உறுதியானது. நான் சில டம்ளர் அரிசியை அல்லாஹ்வின் வழியில் கொடுத்தேன். அல்லாஹ் அதற்குப் பதிலாக 100 கிலோ அரிசியும் சிறிது தொகையையும் வழங்கி விட்டான் என்று கூறினார்.

பிறகு கினிபஸாவ் முபல்லிக் எழுதுகிறார்: இதன் மூலம் ஏழைகளின் தியாகத்தின் தரம் தெரிய வருகிறது. பிறகு அல்லாஹ் எவ்வாறு அவர்களின் ஈமானைப் புத்துணர்வு அடையச் செய்கிறான்!

கப்போடா ஜமாஅத்தின் உறுப்பினரான தியாலோ சாஹிப் என்பவருக்கு தஹ்ரீகே ஜதீது சந்தாவின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டது. உடனே அவர் சட்டைப் பையில் கைவிட்டு அதிலிருந்த 1000 ஸிஃபா தொகையை சந்தாவாக வழங்கி விட்டார். இந்தத் தொகையை எடுத்துக் கொண்டு குழந்தைகளுக்கு உணவுப்பொருள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றேன். அதனை சந்தாவாகக் கொடுத்து விட்டு வீட்டிற்குத் திரும்பினேன். அப்போது பணம் இல்லை. அவர் மீன் பிடிப்பவராக இருந்தார். எனவே மீன் பிடிக்கச் சென்றார். அதன் மூலம் குழந்தைகளுக்கு ஏதாவது வாங்க முடியும் என்றார்.

அவர் கூறுகிறார்: நான் வலை வீசி மீன் பிடிப்பவனாக இருந்தேன். நான் மீன் பிடிக்க வலையை வீசினேன். ஒரு மணி நேரத்திற்குள் எனது வலையில் 73 கிலோ மீன்கள் அகப்பட்டது. மற்ற மீனவர்களும் உடன் இருந்தனர். அவர்கள் பார்த்தனர். ஒரு மணி நேரத்திற்குள் இவ்வளவு மீன் கிடைத்து விட்டது. இது எமக்கு முழு இரவிலும் கூட கிடைப்பதில்லை என்றனர். அப்போது நான் அவர்களிடம் கூறினேன். இது தஹ்ரீகே ஜதீது சந்தாவின் பரக்கத் ஆகும். ஒரு மணி நேரம் முன்புதான் வழங்கினேன். இருந்த பணம் முழுக்க கொடுத்து விட்டேன்.

பிறகு மீண்டும் மிஷன் ஹவுஸ் வந்தார். இப்போது வருமானம் அதிகமாகி விட்டது என்பதால் மேலும் சந்தா வழங்கினார். அவர் ஏழைதான். உள்ளம் மிகவும் திறந்திருந்தது. அல்லாஹ் வழங்கினால் உள்ளத்தை மூடி வைப்பதில்லை. கையை மூடி வைப்பதில்லை. அல்லாஹ் மீண்டும் வழங்குவதற்காக மேலும் தருகிறார்கள்.

பிறகு காங்கோ அமீர் சாஹிப் எழுதுகிறார்: ரிஜன் பந்தந்தோ உடைய ஜமாஅத்தின் உள்ளூர் முஅல்லிம் ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி எடுத்துக் கூறினார். நானும் முயற்சி செய்து தருபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். அவர் நான் கூறியதை அவர்களிடம் எடுத்துக் கூறினார். கிராம மக்கள் ஏழைகள்; அவர்களிடம் பணம் இல்லை. உடனே உள்ளூர் மக்கள் சந்தா கொடுக்க வேண்டும் என்பதற்காக காட்டிற்குச் சென்று மரம் வெட்டி அடுப்புக்கரி செய்தனர். அதனை அந்த ஊரில் வாங்குவதற்கு ஆளில்லை. அவர்கள் தண்ணீரில் அதிகம் பயணம் செய்கின்றனர். அதனை கப்பலில் ஏற்றி சிரமத்துடன் ஒரு நகரத்திற்கு எடுத்துச் சென்று விற்றனர். இதனால் அவருக்கு 96 ஆயிரம் பிராங்க் பணம் கிடைத்தது. அந்த ஊர் மக்கள் ஒட்டுமொத்தமாக தஹ்ரீகே ஜதீது செலுத்தினர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வியத்தகு மக்களை வழங்கி இருந்தான். அன்னாரின் வாழ்நாளிலும் வழங்கி இருந்தான். எவ்வாறு இம்மக்கள் தியாகம் செய்கின்றனர் என்று பார்த்து வியக்கிறேன் என்கிறார்கள்.

(ஸமீமா அன்ஜாமே ஆத்தம், ரூஹானி கஸாயின் தொகுதி 11 பக்கம் 313 அடிக்குறிப்பு)

ஏழை மக்களின் தியாகம் பற்றி தஹ்ரீகே ஜதீதின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு பெண்ணிடம் இரண்டு முட்டைகள் இருந்தன என்றும், ஒருவர் அதனை வாங்கிச் சென்றார். அந்த தொகையை அப்பெண் சந்தாவாக கொடுத்தார் என்று கூறியிருந்தார்கள். இதுபோன்ற தியாகம் இப்போதும் காணக் கிடைக்கிறது. அல்லாஹ்வின் கவனத்தை ஈர்ப்பதற்காக பிவஜ்ஹில்லாஹ் – செலவு செய்கின்றனர்.

கினிபிசாவ் முபல்லிக் எழுதுகிறார்: எமது நாட்டின் தூரப் பகுதியிலுள்ள கபூகரே என்ற ஊரிலுள்ள ஏழையான ஓர் அஹ்மதிப் பெண் உள்ளார். அவரது வயது 50. வருமானத்திற்கான எந்த வழியும் அவரிடம் இருக்கவில்லை. சில நாட்களுக்கு முன் தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்டது. அந்தப் பெண்ணிடம் எதுவும் இருக்கவில்லை. ஒரு சிறிய கோழி இருந்தது. அதனை வளர்த்து விற்று சந்தாவைக் கொடுப்பேன் என்று அவர் நிய்யத் செய்தார். சில நாட்கள் கழிந்த பிறகு கோழிகளுக்கு தொற்றுநோய் வந்தது. ஒருநாள் இவரது கோழியும் நோயுற்றது. இந்தக் கோழி சாகப்போகிறது; அதனை அறுத்து விடு என்று வீட்டினர் கூறினர். நான் இதனை அறுக்கமாட்டேன் என்று கூறினேன். மேலும், என்னிடம் இதனைத் தவிர வேறு எதுவும் இல்லை. நீ எனக்கு உதவி செய்து காப்பாற்றுவாயாக என்று துஆ செய்தார். மறுநாள் வளர்ந்திருந்த ஒரு கோழியை 20 நாட்களுக்குப் பிறகு முஅல்லிமிடம் கொடுத்து, இதுவே எனது சந்தா என்றார்.

இவ்வாறு அல்லாஹ் அருள் செய்கின்றான். மக்கள் எங்களுக்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். பார்ப்பதாக இருந்தால் தொடர்பு நன்றாக இருந்தால் அல்லாஹ் அடையாளத்தை வழங்கி விடுகிறான். இந்த சிறு சிறு அடையாளங்கள் இவர்களின் ஈமான் அதிகரிக்கக் காரணமாக அமைகிறது.

அல்லாஹ்வின் நடைமுறைக்கு இன்னோர் உதாரணம் தன்ஸானியா உடைய மாரா மண்டலத்தின் முஅல்லிம் கூறுகிறார்: ஒரு களங்கமற்ற இளைஞராகிய ராஸிக் ஹுஸைன் சாஹிப் என்ற அஹ்மதிக்கு ஒரு ரேஷன் பொருள் விற்கின்ற ஒரு கடை இருந்தது. வாக்குறுதிக்கேற்ப அவர் தனது முழு சந்தாவை தஹ்ரீகை ஜதீதில் வழங்கி விட்டார். வருடம் முடிவடையும்போது முஅல்லிம் இன்னும் கொடுப்பதற்காகத் தூண்டினார். எவர்களுக்கு இன்னும் தர முடியுமோ தரலாம் என்று கூறினார்கள். இவர் அந்தக் கூட்டத்தில் வர முடியாத நிலை இருந்தது. ஏனெனில் அவர் மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்தார். கடையில் வேகமாக விற்காத பொருள்கள் தான் இருந்தன.

எவ்வாறிருப்பினும், அவர் கூறினார்: என்னிடம் வெறும் மூவாயிரம் ஷில்லிங் தான் இருந்தது என்று கூறி அதனைக் கொடுத்து விட்டார். அதேநாள் மாலை அவர் முஅல்லிமிடம் மீண்டும் வந்தார். எனக்கு ஒரு வியப்பான சம்பவம் நடந்தது என்று கூறினார். என்னிடம் சந்தாவாகத் தந்த அதனைத் தவிர வேறு எந்தத் தொகையும் இல்லாத நிலையில், விற்பதற்கு பொருள்களும் அதிகமாக கடையில் இல்லாத நிலையில் சந்தாவின் பரக்கத்தால் என் மீது அசாதாரணமான முறையில் அருள் செய்தான். மதியம் என்னிடம் ஒருவர் வந்து பொருள் வாங்கினார். நான் விற்காது என்று கருதிய பொருட்களை வாங்கி விட்டார். இதனால் என்னிடம் 23 ஆயிரம் ஷில்லிங் பணம் சேர்ந்து விட்டது. சந்தாவின் பரக்கத்தால் அல்லாஹ் வாழ்வாதாரம் வழங்குகிறான் என்பது இதுதான் என்றார்.

பிறகு மத்திய ஆப்பிரிக்காவில் பாங்கி என்ற நகரில் அஜானா சாஹிப் என்ற ஒருவருடைய சம்பவம். இது அல்லாஹ் ஈமானை உறுதிப்படுத்த எவ்வாறு வழங்குகிறான் என்று காட்டுகிறது. இவர் ஒரு புதிய அஹ்மதி. பைஅத் செய்து எட்டு மாதங்களே ஆகியிருந்தது. என்னிடம் இக்காலத்தில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. ஜுமுஆ குத்பா கேட்டேன். MTA தொடர்ந்து பார்த்து வந்தேன். MTA –வில் தொடர்ந்து

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

குத்பா கேட்டு வருவது எனது வழக்கமாக இருந்தது. அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர் ஏழையாக மாட்டார். அவரது பொருளில் பரக்கத்தை வழங்குகிறான் என்ற சொல்லை நான் கேட்டவுடன் தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்ட உடன் நானும் அதனைப் பார்க்கிறேன் என்று நினைத்தேன். சட்டைப் பையில் எதுவும் இல்லை. 500 ஃபிராங்க் மட்டுமே இருந்தது. சிறிய தொகையான அதனை நான் வழங்கி விட்டேன். இரவில் என்ன உண்பேன் என்ற கவலை ஏற்பட்டது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறிய வார்த்தை நினைவுக்கு வந்தது. இறைவன் கொண்டு தருகிறான் என்று நினைத்தவாறு நான் 500 ஃபிராங்க் வழங்கி விட்டேன் என்கிறார். அவர் ஒரு புதிய அஹ்மதி. ஈமான் பலவீனமாகவும் இருந்தது. முழுமையான ஈமான் உருவாகாவிட்டாலும் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. நிய்யத் நன்றாக இருந்தது.

அவர் கூறுகிறார்: நான் 3–4 மணி நேரம் மிஷன் ஹவுஸில் தங்கி விட்டேன். அப்போது ஒரு உறவினருடைய டெலிபோன் வந்தது. என்னிடம் மாலைகள் உள்ளன. அதனை நகரத்திற்குச் சென்று விற்க வேண்டும். எனக்கு அவ்வளவு விபரம் தெரியாது. எனக்கு உதவி செய்யுங்கள் என்றார். உடனே நான் அவரிடம் சென்றார். மாலையை விற்ற பிறகு எனது நண்பர் 27 ஆயிரம் ஃபிராங்க் அன்பளிப்பாகத் தந்தார். இது மட்டுமல்ல வாங்கியவரும் கூட 10 ஆயிரம் ஃபிராங்க் அன்பளிப்பாகத் தந்தார். எனக்கு தெரிய வந்தது. நான் 500 ஃபிராங்க் கொடுத்தேன். அல்லாஹ் எனக்கு சில மணி நேரங்களிலேயே 37 ஆயிரம் ஃபிராங்க் வழங்கி விட்டான். இதனால் எனது ஈமான் வளர்ந்தது என்று கூறினார்.

யூ.கே –விலிருந்து ஒரு பெண்மணி. அல்லாஹ் அவருடன் எவ்வாறு நடந்து கொண்டான்? அவரது ஈமான் எவ்வாறு வளர்ந்தது என்று பார்க்கலாம். அவர் கூறுகிறார்: நான் தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்கி விட்டேன். உள்ளூர் சத்ர் சாஹிபாவிடம் இருந்து தூதுச் செய்தி வந்தது. நமது இலக்கை பூர்த்தி செய்ய இன்னும் நிறைய தொகை தேவை என்று அதில் இருந்தது. அப்போது நான், என்னிடம் பணம் இருந்தாலும் வேறு செலவு உள்ளதே என்று யோசித்தேன். இறுதியில் மேலும் சந்தா வழங்குவதற்கு முடிவு செய்தேன். என்னிடம் இருந்த தொகையை சந்தாவாக வழங்கி விட்டேன். மறுநாள் எனது வங்கிக் கணக்கைப் பார்த்து ஆச்சரியமாகி விட்டது. நான் எவ்வளவு தொகை வழங்கினேனோ அதனை விட நான்கு மடங்கு அதிகமாக எனது பணிக்காக தொகை போடப்பட்டிருந்தது. இது முற்றிலும் நான் எதிர்பாராததாக இருந்தது.

ஆப்பிரிக்காவில் மட்டுமல்ல. இங்கும் ஐரோப்பாவிலும் நல்ல மக்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் பரக்கத் வழங்குகிறான்.

புர்கினோஃபாஸோ அமீர் சாஹிப் எழுதுகிறார்: கோலூவில் சவாட்டோ சாஹிப். இவர் தஹ்ரீகே ஜதீதில் ஒவ்வொரு மாதமும் 100 ஃபிராங்க் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒருமுறை அவருக்கு ஒருவர் அன்பளிப்பாக 3 ஆடுகள் வழங்கினார். அதில் ஒன்றை இவர் தஹ்ரீகே ஜதீதுக்கு வழங்கி விட்டார். இரண்டை தன்னிடம் வைத்துக் கொண்டார். அவரது ஆடுகளில் அல்லாஹ் எவ்வளவு பரக்கத் வழங்கினான் எனில் அவர் நிறைய கால்நடைகளின் உரிமையாளர் ஆனார். 100 ஃபிராங்க்கிற்குப் பதிலாக மாதம் 1000 ஃபிராங்க் வழங்கத் தொடங்கினார்.

களங்கமற்ற பற்றுறுதியுடன் கூடிய தியாகத்திற்கு இன்னோர் உதாரணம் பெனின் மண்டலத்தின் லோகோஸா முபல்லிக் எழுதுகிறார்: லோகோஸாவின் பெரும்பாலான பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வழி முழுக்க அடைபட்டது. ஜமாஅத்திலிருந்து இவருடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அது எல்லைப் பகுதியாக இருந்ததால் பெரும்பாலானவர்களுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. உள்ளூர் மிஷனரி எவரிடம் மோட்டார் போட் இருக்கிறதோ அவர்கள் அதனை தந்தால் நான் மக்களை சென்று பார்க்க முடியும் என்று யோசனை கூறினார்.

காவல்துறையினரிடம் சென்று பேசப்பட்டது. காவல்துறையினர் ஒரு நிபந்தனையுடன் ஒப்புக் கொண்டனர். அதாவது நீங்கள் பெட்ரோல் போட்டால் உங்களுக்கு உதவி செய்வேன் என்றனர். அவ்வாறு செய்து நாங்கள் சென்று ஜமாஅத்தின் சதரைச் சந்தித்தோம். அவர் அழத் தொடங்கினார். அவருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்தது. விளைச்சல் அழிந்தது. வீட்டில் ஓர் அறை இடிந்து விழுந்து விட்டது. நாங்கள் அவருக்கு ஆறுதல் கூறினோம். அல்லாஹ் அருள் செய்வான். உங்கள் நஷ்டம் சீர் செய்யப்படும் என்றோம்.

அப்போது அவர் கூறினார்: நஷ்டம் ஏற்பட்டதற்காக நான் அழவில்லை. மாறாக, வெள்ளப்பெருக்கு வரும் முன் நான் சந்தாவை சேர்த்து வைத்திருந்தேன். முஅல்லிம் வரும்போது சந்தாவைக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் எல்லா வழியும் அடைபட்டு விட்டது. எனக்கு பெரும் கவலை ஏற்பட்டு விட்டது. அல்லாஹ்வே! எனக்கு எந்த உதவியும் இல்லை. எனது சந்தாவை தலைமையகத்தில் சேர்க்க வழியில்லாமல் இருந்து விட்டதே! அதனை சேர்க்க வழியை ஏற்படுத்துவாயாக என்று துஆ செய்தேன்.

இன்று நீங்கள் நாங்கள் எவ்வாறிருக்கிறோம் என்று பார்ப்பதற்காக வந்துள்ளீர்கள். சந்தா வாங்குவதற்காக அல்ல. இதனைப் பார்த்து எனக்கு அழுகை வந்து விட்டது. எவ்வளவு விரைவாக இறைவன் எனது துஆவை ஒப்புக் கொண்டு விட்டான். நான் எனது கடமையை நிறைவேற்ற வாய்ப்பு கிடைத்து விட்டதே என்றார். அவருக்கு தனது நஷ்டம் குறித்து கவலையில்லை. கவலையெல்லாம் நாம் அல்லாஹ்வுக்காக செய்த வாக்குறுதியை அல்லாஹ்வின் கவனத்தை ஈர்க்க வாக்களித்த தொகையை குறிப்பிட்ட நேரத்தில் வழங்க வேண்டுமே என்பதாகவே இருந்தது.

இந்தியாவிலிருந்து தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் இப்ராஹீம் சாஹிப் எழுதுகிறார்: கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். இதுவும் அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஓர் உதாரணமாகும். குல்பர்காவின் ஓர் இளைஞர், பெங்களூரில் ஒரு கம்பெனியில் 20 ஆயிரம் ரூபாய் மாத வருமானத்தில் பணி செய்து வந்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தரமான தியாகத்திற்கு உதாரணமாகிய மாத வருமானத்தின் பாதி தொகையை தியாகம் செய்வதற்காக வாக்குறுதி அளித்திருந்தார். இவரது வீட்டின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கவில்லை. இருந்தும் கூட 10 ஆயிரம் ரூபாய் வாக்குறுதி அளித்திருந்தார். அவரது உறவினர்கள் நீர் இவ்வளவு தொகை வாக்குறுதி அளித்திருக்கக் கூடாது. உமக்கு மிகவும் சிரமம் என்று கூறினர். ஒரு மாத சம்பளத்தில் பாதியைக்

## திருக்குர்ஆனிலிருந்து...

பாசம் செய்யும் ஒருவர் அச்செயலைத் தமக்கு எதிராகவே செய்கிறார். அல்லாஹ் நன்கு அறிபவனும், நுண்ணறிவுடையோனுமாவான். ஒருவர் ஒரு தவற்றையோ, பாவத்தையோ செய்து விட்டு, அதனைக் குற்றமற்ற ஒருவரின் மேல் சுமத்தினால், நிச்சயமாக அவர் பொய்க் குற்றச்சாட்டையும், தெளிவான பாவத்தையும் சுமக்கிறார். (4:112,113)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

கொடுப்பது கஷ்டம் என்றனர். அதற்கு அந்த இளைஞர், மனிதன் முழுமையாக முயற்சி செய்யாமல் அல்லாஹ்வின் மலக்குகள் அவருக்கு ஆற்றல் வழங்க மாட்டார்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நிச்சயமாக நான் நிறைவேற்றுவேன் என்று கூறினார். சில நாட்கள் கழிந்த பிறகு அவருக்கு இன்னொரு கம்பெனியில் பணி கிடைத்தது. அங்கு அவருக்கு ஒரு இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்தது. இது சந்தாவின் பரக்கத்தால் கிடைத்தது என்று அவர் கூறுகிறார்.

பிறகு இந்தியாவின் தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் கேரள மாநிலத்திலிருந்து எழுதுகிறார்: கருளாயியைச் சார்ந்த ஒரு கலப்பற்ற அஹ்மதி, தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்குபவர்கள் பெரும் சிறப்புத் தன்மை பெறுகிறார்கள் என்பதால் பர்னீச்சர் வியாபாரியான இவர் வகீலுல் மால் சுற்றுப் பயணம் செய்தபோது தமது தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பித்தார். அப்போது துஆவுக்காக ஒரு விஷயத்தைக் கூறினார். இப்போது வியாபாரம் நன்றாக இல்லை. சிறப்பாக துஆ செய்யுமாறு கூறினார்.

பிறகும் கூட அவர் தனது சந்தாவாக 15 இலட்சம் வருடத்திற்கு தருவதாக எழுதச் சொன்னார். ஆனால் வாக்குறுதிக்கேற்ப இவ்வருடம் 2 இலட்சம் தான் தர முடிந்தது. காலம் குறைவாகவே இருந்தது. எவ்வாறு இந்த சந்தாவை வழங்குவோம் என்ற இதே கவலையில் இருந்தார். எனக்கும் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். நிதியாண்டின் கடைசி நாளில் துஆ செய்யுங்கள். அல்லாஹ்வின் அருளால் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று எழுதினார். சில மணி நேரங்கள்தான் கழிந்திருக்கும். ஒரு பெரும் தொகை இவரது வங்கிக் கணக்கில் ஏறியது. அவர் தமது வாக்குறுதியை மட்டும் நிறைவேற்றவில்லை. மாறாக கூடுதலாக ஒரு தொகையையும் வழங்கினார். தொழில் ரீதியாக இவருக்கு தேவையாக இருந்த பெரும் தொகை கிடைத்தது.

பிறகு பெனின் மண்டலத்தின் நாத்தி –யின் முஅல்லிம் எழுதுகிறார்: கத்தம்போத்தி ஜமாஅத்தின் ஒரு நண்பர். அவரிடம் கூறப்பட்டதும் எந்த தயக்கமுமின்றி 3000 ஃபிராங்க் ஸிபா தொகையை வழங்கி விட்டார்.

முஅல்லிம் கூறுகிறார். நான் அவரிடம் வியப்புடன், இவரிடம் பெரிய நினைவூட்டலுக்குப் பிறகும் கூட 500 ஃபிராங்க் ஸிபாவை விட அதிகமாக வழங்கியதில்லை. இப்போது எப்படி இவ்வளவு தொகையை வழங்கினீர்கள். நடந்து என்ன? என்று கேட்டேன்.

அவர் கூறினார்: நான் சந்தாவில் மிகவும் சோம்பல் காட்டி வந்தேன். எனக்கு அதனால் பிரச்சனைகள் ஏற்பட்டன. விளைச்சலும் நன்றாக இருப்பதில்லை. கடைசி முறை நான் சந்தா கொடுக்கும்போது இதன் பரக்கத்தால் என்ன நடக்கப் போகிறது? என்று பார்ப்போம் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். பிறகு நான் அனுபவத்தில் பார்த்தேன். சந்தாவின் பரக்கத்தால் யதார்த்தத்தில் அல்லாஹ் மறைவான முறையில் உதவி செய்கிறான். நமது தேவைகளை நிறைவேற்றுகிறான். விளைச்சலில் பரக்கத் ஏற்படுத்துகிறான். எனவே இதனை நான் சுயமே அனுபவித்து விட்டேன். எனவே கேட்பதற்கு முன்பே 50 மடங்கு அதிகமாக நானே அதிகரித்து வழங்கி விட்டேன். இன்னும் சொல்வதென்றால் 6 மடங்கு அதிகமாகக் கொடுத்து விட்டேன் என்றார்.

கனடாவில் அங்குள்ள குழந்தைகளின் உதாரணத்தை அங்குள்ள சதர் கூறுகிறார்: அக்டோபரில் தஹ்ரீகே ஜதீது வாக்குறுதியை முழுமைப்படுத்த அறிவுறுத்தி வந்தோம். வீட்டின் குழந்தைகளையும் அறிவுறுத்தி வந்தோம். அவர்களும் தமது கைச்செலவு பணத்திலிருந்து வாக்குறுதியை விட அதிகமாக சந்தா வழங்கினார்கள். ஒரு மகள் இப்போதுதான் இஞ்சினியரிங் முடித்திருந்தாள். அவளிடம் சிறிது தொகை இருந்தது. அதனை சந்தாவாகக் கொடுத்து விட்டாள். முதலில் அவள் நேர்காணல் சென்றிருந்தாள். அதில் வெற்றி கிடைக்கவில்லை. சந்தா வழங்கினார். மறுநாளே ஒரு பணிக்கு நேர்காணல் இருந்தது. திரும்பியதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். மறைவான ஒரு சக்தியால் அவருக்கு நேர்காணல் எல்லாம் எளிதாக நடந்தது.

நேர்காணலுக்குச் சென்ற கம்பெனியில் இன்னும் பலரும் நேர்காணல் செய்திருந்தனர். வருட முடிவில்தான் முடிவு தெரியும் என்ற நிலையில் இவரது நேர்காணல் மிகச் சிறப்பாக இருந்தது என்றாலும் வருட முடிவில்தான் முடிவு தெரியும் என்ற நிலையிலும் இரண்டே நாட்களில் நீங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளீர்கள் என்று அழைப்பு வந்தது. பிப்ரவரி 2020 முதல் பணிக்கு வர வேண்டும் என்று செய்தி வந்தது. மறுநாள் மீண்டும் அழைப்பு வந்தது. பிப்ரவரி 2020 முதல் மற்றவர்கள் பணிக்கு வருவர். ஆனால் நீங்கள் இந்த வருடம் நவம்பர் முதல் வரலாம் என்று செய்தி வந்தது. அந்தப் பெண்ணுக்கு இதனால் ஈமான் வலுப்பெற்றது. ஈமான் வளர்ச்சி அடைந்தது. அல்லாஹ்வின் அருள்களைப் பார்த்தார்.

மாஸ்கோவின் முபல்லிக் எழுதுகிறார்: ஒவ்வொரு நாட்டிலும் அல்லாஹ் தியாகத்தின் முன்மாதியைக் காட்டுகிறான். தியாகத்திற்குப் பிறகு தனது அருளின் காட்சியைக் காட்டுகிறான். ஒரு நண்பர் ஸாயிர் சாஹிப். உஸ்பெஸிகிஸ்தானின் புகாரா என்ற நகரைச் சார்ந்தவர். இவர் நீண்ட காலமாக மாஸ்கோவுக்கு பணிக்காக வருவார். சிறிது பணம் சேர்ந்ததும் திரும்பி ஊருக்குச் சென்று விடுவார். இவரது மனைவி பைஅத் செய்வதற்கு யோசனை செய்தார். பிறகு துஆ செய்தார்.

பின்னர் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்றார். சிறிது காலத்திற்கு முன் தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி கவனமூட்டப்பட்டது. அவரது மனைவியிடம் தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறுமாறு கூறப்பட்டது. அவர் உஸ்பெஸிகிஸ்தானில் டாக்ஸி ஓட்டுகிறார். மனைவி தையல் வேலை செய்கிறார். இருவரும் ஒரு விதிமுறை வகுத்துள்ளனர். தமது வருமானத்தை மூன்று பகுதியாகப் பிரித்து ஒரு பகுதியை குழந்தைகளுக்கும், ஒரு பகுதியை வீட்டிற்காகவும், ஒரு பகுதியை அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்து சந்தா கொடுப்பதற்காகவும் செலவழிக்க வேண்டும் என்பதாக முடிவெடுத்து இதில் திருப்தியுடன் இருந்தார்கள். குடும்ப வாழ்வும் மகிழ்ச்சியுடன் கழிந்தது.

ஷாஹித் சாஹிப் கூறுகிறார்: சந்தாவில் பங்கு பெறத் தொடங்கியதும் அவருக்கு அல்லாஹ் சிறப்பான பரக்கத் வழங்கினான். அவரது வருமானத்தில் பெரும் பரக்கத் ஏற்பட்டது. அது சென்ற வருடங்களில் நடக்காததாக இருந்தது.

பிறகு ரஷ்யாவிலிருந்து முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்: மாஸ்கோவின் சலாம் சாஹிப் செஃப் ஆக வேலை செய்கிறார். சில

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் அருளும், அவனது கருணையும் உம்மிடத்து இல்லாதிருப்பின் (எதிரிகள் வெற்றி பெற்றிருப்பர். ஏனெனில்) அவர்களில் ஒரு பிரிவினர் உம்மை அழித்து விட நாடினர். பிறகு அவர்கள் தங்களையே தவிர வேறெவரையும் அழிப்பதில்லை. அவர்கள் உமக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது. (4:114)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

காலத்திற்கு முன்பு வீடு கட்டுவதற்காக பெரும் தொகையைக் கடனாகப் பெற்றிருந்தார். நீண்ட காலமாக இரு மடங்கு பணி செய்து கடனை அடைக்க முயற்சி செய்து வந்தார். ஒருநாள் போன் வந்தது. உடனே நான் எனது சந்தாவைக் கொடுக்க விரும்புகிறேன் என்றார். காரணம் கேட்டபோது, அவர் முதலில் பணி செய்த இடத்தில் வர வேண்டிய கூலியின் பெரும் தொகை உரிமையாளரிடம் தங்கி விட்டது. முதலில் அவர் பணி செய்த இடம் மாட்டிக் கொண்டது. இவர் துஆவுக்காகவும் எனக்கு கடிதம் எழுதினார். இறைவன் தனது அருளால் மூழ்கி விட்ட அந்தத் தொகையைத் திருப்பித் தந்தான். இதனால் எனது உள்ளத்தில், என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக சந்தாவை செலுத்த வேண்டும் என்ற பெரும் ஆசை எழுந்தது. அதிலிருந்து சந்தாவுக்காக ஒதுக்கி அனுப்பி வைத்தேன் என்றார்.

ஜெர்மனி ஜமாஅத்தின் ஓர் இளம்பெண் எழுதுகிறார்: அவர் இரண்டு மாதக் கர்ப்பிணியாக இருந்தார். இப்போது குழந்தை பிறந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டன. நான் கர்ப்பமுற்றிருந்தபோது அதிகமாக துஆ செய்தேன். ஒவ்வொரு மாதமும் தஹ்ரீகே ஜதீதில் 100 யூரோ தருவதாக வாக்குறுதியும் தந்தேன். பிறகு அடுத்த 7 மாதமும் நலமாகக் கழிந்தது. கஷ்டங்கள் நீங்கின. அல்லாஹ் எனக்கு ஒரு மகனை வழங்கினான். அல்லாஹ்விடம் நான் செய்த வாக்குறுதியாகிய 100 யூரோவை ஒவ்வொரு மாதமும் வழங்குவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறேன் என்கிறார்.

இப்போது உலகம் முழுவதும் உலகாதாயத்தில் மூழ்கியுள்ளது. இறைவனை விட்டு விலகியுள்ளது. இங்கு அஹ்மதிகளுக்கு அல்லாஹ் தனது அருள்களை வழங்கி தனது இருப்பை காண்பித்துத் தருகிறான். அதே வேளையில் அஹ்மதிய்யத்தின் உண்மையையும் வெளிப்படுத்துகிறான்.

லிட்வியாவின் முபல்லிக் எழுதுகிறார்: லிட்வியாவின் அஹ்மதி வஹிதோ சாஹிப், இவரும் உஸ்பெஸ்கிஸ்தானின் புகாரா பகுதியைச் சார்ந்தவர்தான். சில வருடங்கள் முன்பு இவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் இவரது களங்கமின்மையும் பற்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இவரது குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடந்து கொண்டதால் இவரது மனைவியும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்.

இவர் கூறுகிறார்: போன் மூலமாக சந்தா பற்றி கூறப்பட்டது. ஆறு மாதங்கள் உஸ்பெஸ்கிஸ்தானிலும் ஆறு மாதங்கள் ரஷ்யாவிலும் பணி செய்கிறேன். இவ்வருடம் புகாராவில் ஒரு பிளாட் வாங்கினேன். அதற்காக எனது காரை விற்க வேண்டியதாயிற்று. நான் பணி செய்ய ரஷ்யா சென்றபோது யோசித்தேன். அல்லாஹ்வுடன் ஒரு வியாபாரம் செய்ய வேண்டும். எனவே நான் சந்தாவின் பரக்கத்தால் கார் வாங்க பரக்கத் வழங்க வேண்டும் என்ற நிய்யத்தில் சந்தா கொடுக்க ஆரம்பித்தேன். சந்தா வழங்கியதால் அல்லாஹ் எனது பணியில் பரக்கத் செய்தான். எனக்கு வீட்டுச் செலவு போக கார் வாங்க ஒரு தொகை சேர்ந்து விட்டது. நான் புகாரா திரும்பி வந்து கார் வாங்கினேன். பிளாட் வாங்குவதற்காக விற்ற முந்தைய காரை விட நல்ல ஒன்றை வாங்கினேன். இது சந்தாவின் பரக்கத்தால் ஏற்பட்ட விளைவாகும். அது அல்லாமல் இவ்வளவு பெரும் தொகை சேர்ப்பது எனக்கு இயலாத காரியமாகும். இவர் சில காலங்களுக்கு முன்பு பைஅத் செய்தார். இதனால் எனது ஈமான் அதிகமானது என்று இவர் கூறுகிறார்.

கினிபஸாவ் உடைய முபல்லிக் கூறுகிறார்: ஒரு சாஹிப் ஒரு பிறப்பு அஹ்மதியாக இருந்தும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டும் தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறவில்லை. இவர் பிளாக்குகள் செய்யும் தொழில் செய்தார். சிமெண்டால் பிளாக்குகள் செய்து வைத்திருக்கும்போது இரவில் மழை பெய்தது. எல்லா பிளாக்குகளும் வீணாகி விட்டன. பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இரவில் பெரும் கவலையுடன் உறங்கினார்.

அவர் கூறுகிறார்: கனவில் பார்த்தேன். எனது மறைந்த தந்தையார் வந்துள்ளார். நீ உனது சந்தாக்களைக் கொடுத்து விட்டாயா? என்று கேட்கிறார். இதனை கூறி விட்டுச் சென்று விட்டார். காலை எழுந்தவுடன் நான் மிஷன் ஹவுஸ் சென்று மிஷனரியிடம், தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி வலியுறுத்தினீர்கள். என்னிடம் இப்போது 2 ஆயிரம் ஃபிராங்க் தான் இருக்கிறது. அதனை தருகிறேன் என்றார். சந்தா வழங்கிய மறுநாளே நஷ்டம் திரும்பக் கிடைக்கும் அளவுக்கு புதிய கான்டிராக்ட் கிடைத்தது. அது 8 இலட்சம் ஃபிராங்க் ஸிஃபா ஆகும். இதனால் கடன் அடைந்தது. இப்போது வஸிய்யத்தும் செய்து விட்டார். இவரது ஈமான் வளர்ச்சியும் அடைந்தது.

மாயுட் அய்லீண்ட் –ல் ஒரு நண்பர். இவருக்கு நிரந்தர பணி இருக்கவில்லை. அலி முஹம்மது சாஹிப் கூறுகிறார்: நான் தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்கினேன். பணியைத் தேடுவதில் சிரமம் ஏற்படவில்லை. ஒரு பணி முடிக்கவும் இன்னொன்று கிடைத்தது. சந்தா வழங்கிய பிறகு எனக்கு தொடர்ந்து பணி கிடைத்தது.

இது புதிய ஜமாஅத். தொடங்கப்பட்டு சில ஆண்டுகளே ஆகியுள்ளன. ஈமானின் கலப்பின்மையும் வளர்ந்து வரும் ஜமாஅத் ஆகும்.

பிறகு இந்தோனேஷியா அமீர் சாஹிப் எழுதுகிறார்: பங்னடான் உடைய ஓர் அஹ்மதி அவ்ர்யானா சாஹிப். இவர் தனியாக வாழ்கிறார். மனைவி மரணித்து விட்டார். இவர் சந்தா கொடுப்பதற்கு என்னென்ன வழிமுறைகளைக் கையாளுகிறார் என்று பார்த்தால் வியப்பு ஏற்படுகிறது. இவர்களிடம் கலப்பின்மையும் பற்றும் காணப்படுகிறது. இவர் ஏழை ஆவார். வயல் வேலை செய்கிறார். பிள்ளைகளுக்கு திருமணமாகி விட்டது. மனைவி இல்லை. தப்லீக், தர்பிய்யத் பணிகளில் முபல்லிகிற்கு உதவியாக இருப்பார். இவருக்கு ஒரு சிறிய வயல் இருந்தது. விவசாயிகளுக்கு வருமானம் சில மாதங்களுக்குப் பிறகு தான் கிடைக்கிறது. ஒவ்வொரு 3 அல்லது 4 மாதங்களுக்குப் பிறகு வருமானம் வருகிறது. இவர் மாதாமாதம் சந்தா முறையாக செலுத்தி வந்தார்.

ஒருமுறை முபல்லிக் கேட்டார். உங்கள் சாகுபடி 3–4 மாதம் ஒருமுறை நடக்கும். சந்தா வேறு முறையாகத் தருகிறீர்கள் எப்படி? என்றதும், அவர் கூறினார்: நான் சந்தா கொடுக்க ஒரு நடைமுறை வைத்துள்ளேன். நான் எனது வயலில் ஒரு பகுதியைப் பிரித்து அதில் வாழையைப் பயிரிட்டுள்ளேன். அதனையும் எவ்வாறு பயிரிட்டுள்ளேன் என்றால் ஒரு பகுதி நட்டி சில காலம் கழித்து மற்ற பகுதியை நடுவேன். சிறிது காலம் கழித்து 3–வது பகுதி நடுவேன்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நேர்வழி தமக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னர் இத்தூதரை எதிர்த்து நம்பிக்கை கொண்டோருடையதல்லாத வழியைப் பின்பற்றுகின்றவரை நாம் அவர் செல்லும் வழியிலே அவரைச் செல்லவிட்டு, அவரை நரகில் போடுவோம்; அது மிகக்கெட்ட தங்குடமாகும். **(4:116)**

Faizal Hameed Ilahi, Tittacherry

இவ்வாறு ஒவ்வொரு மாதமும் வாழை சாகுபடி வருடம் முழுக்க பழம் தரும். நான் மாதாமாதம் பழத்தை அறுத்து சந்தையில் விற்று அதில் வருகிற தொகை முழுவதையும் சந்தாவாக வழங்கி விடுவேன் என்றார்.

இன்தோனேஷியா அமீர் சாஹிப் எழுதுகிறார்: பர்சார் பங்காரியா என்ற ஜமாஅத்தில் புதிய அஹ்மதியான இவர் சிறிது காலம் முன்பு பைஅத் செய்திருந்தார். மனைவி தரப்பில் இவருக்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஆனால் இவர் உறுதியாக இருந்தார். தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடம் தொடங்கியதும் நமது முபல்லிக் இவரிடம் தஹ்ரீகே ஜதீதில் இணையுமாறு வலியுறுத்தினார். அவர் 5 இலட்ச இந்தோனேஷ்யா ரூபாய் தருவதாக வாக்குறுதி அளித்தார். இந்தோனேஷியா ரூபாய் மதிப்பு மிகவும் குறைவாகும். ஆனால் அவருக்கு அது பெரும் தொகையாகும். அவர் ஒரு சாதாரண ஆசிரியர். வருமானம் குறைவாக இருந்தது.

நமது முபல்லிக் அவரிடம் இவ்வளவு தொகை எழுதுகிறீர்களே முடியுமா? சிரமப்படாதீர்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்டார். அவர் உறுதியுடன் இதுவே எனது வாக்குறுதி என்றார். ரமலான் மாதம் இவரிடம் 100 சதவீதம் வழங்குமாறு கூறப்பட்டபோது இவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார். ஒருநாள் இவரது உறவினர் அன்பளிப்பாக சிறிது தொகை கொண்ட உறையைக் கொடுத்தார். இவர் உறையைப் பிரிக்கவில்லை. சத்ர் ஜமாஅத்தின் வீட்டிற்குச் சென்று இந்த உறையில் எவ்வளவு உள்ளதோ அதனை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வழங்குகிறேன் என்றார். ஜமாஅத்தின் சதர் அந்தக் கவரைப் பிரித்த போது அதில் 5 இலட்சம் இந்தோனேஷியன் ரூபாய் இருந்தது. அந்த இடத்தில் அவர் தனது வாக்குறுதிக்கேற்ப தொகையை வழங்கி விட்டார்.

பிறகு குழந்தைகளின் களங்கமின்மை மற்றும் பற்றுடன் தியாகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் காணப்படும் ஒரு புரட்சியாகும். இதனை அன்னார் ஜமாஅத்தில் உருவாக்கியுள்ளார்கள்.

கானாவின் முபல்லிக் எழுதுகிறார்: சில காலம் முன்பு பொருள் தியாகம் மற்றும் தஹ்ரீகே ஜதீது குறித்து நான் குத்பா கொடுத்தபோது குழந்தைகளிடம் தியாகத்தின் பரக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தேன். அவர்கள் தமது கரங்களால் சந்தா கொடுக்க வேண்டும். இந்நிலையில் அடுத்த ஜுமுஆவில் ஒரு சிறுவர். அவரது வயது 9–10 இருக்கலாம். ஒரு தொகையை எடுத்து வந்து தஹ்ரீகே ஜதீதிற்கு வழங்கினார். கேட்டபோது நான் பெற்றோரிடம் சந்தாவுக்காக தொகை கேட்டபோது அவர்களிடம் இருக்கவில்லை. எனவே நான் ஒரு கடையில் வேலை செய்து பணம் பெற்று இந்த தொகையை கொடுத்தேன் என்று கூறினார்.

பிறகு சிராலியோனில் ஓர் உதாரணம். அங்குள்ள உள்ளூர் முஅல்லிம் எழுதுகிறார்: பஷீர் சாஹிப் கென்யாவைச் சேர்ந்தவர். சிராபோ ஜமாஅத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தா பற்றி கூறப்பட்டபோது ஒரு 9–10 வயது குழந்தை நெருப்பு எரிக்கத்தக்க விறகுக் கட்டைகளைத் தலையில் சுமந்து வந்து முஅல்லிம் சாஹிபிடம் கூறினார். இந்த கட்டைகளை என்னிடம் வாங்கிக் கொள்ளுங்கள். எவ்வளவு பணம் வருமோ அதனை சந்தாவாக போட்டுக் கொள்ளுங்கள் என்றார். முஅல்லிம் சாஹிப் அந்த கட்டைகளை வாங்கிக் கொண்டு சந்தா ரசீது வழங்கினார். பிறகு அந்த கட்டைகளை பையனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார். உனது சந்தா வந்து விட்டது என்று கூறினார்.

அல்லாஹ் இம்மக்களின் பொருள் மற்றும் ஈமானில் பரக்கத் ஏற்படுத்துவானாக. இவ்வாறு குர்பானியின் சித்திரம் இங்குள்ள குழந்தைகளிடம் இருக்காது. இவ்வாறு காட்டில் சென்று விறகு வெட்டி உழைத்து சந்தா கொடுக்க வேண்டும் என்ற உண்ணம் வராது. ஏனெனில் இங்கு நிலைமை நன்றாக உள்ளது. ஆனால் இங்கும் கூட குழந்தைகள் தமது கைச்செலவுப் பணத்திலிருந்து சந்தாவாக தொகை வழங்கியுள்ளனர். குறிப்பாக ஒரு பொருளை வாங்குவதற்காக தொகை சேர்த்தும் அதனை சந்தாவாக வழங்கியும் தியாகம் செய்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் ஒவ்வொருவரும் அவரவர் சூழ்நிலைக்கேற்ப தியாகம் செய்கிற களங்கமின்மை மற்றும் பற்று எல்லா இடத்திலும் காணக்கிடைக்கிறது. அல்லாஹ் இந்த களங்கமின்மை மற்றும் பற்றை வளர்ச்சி அடையச் செய்வானாக. இப்போது நான் சில பட்டியலை எடுத்து வைக்கிறேன். அல்லாஹ் ஜமாஅத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு வழங்கிய குர்பானிகளின் வாய்ப்பு பற்றியும், இவ்வாறு குர்பானிகளை வழங்கும் தன்மை அல்லாஹ்வின் உதவி ஒத்தாசையின்றி முடியாது என்றும் அல்லாஹ்வே உள்ளங்களை மாற்றுபவன். அல்லாஹ்வே உள்ளங்களில் போடுகிறான். பெரியவர்கள் சிறியவர்கள் என பல்வேறு பகுதிகளிலும் வாழும் அஹ்மதிகளிடம் ஏற்படுத்துகிறான் என்பதும் அறிவுள்ளவருக்குப் புரிய முடியும். இந்த விஷயமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கு ஆதாரமாகும்.

நான் கூறியதுபோன்று தியாகங்களின் பட்டியலை எடுத்து வைக்கிறேன். அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதின் 85 –வது வருடம் 31 அக்டோபர் மாதத்துடன் முடிவடைந்து 86 –வது வருடம் தொடங்கி விட்டது. கடந்த நிதியாண்டில் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் 13.6 மில்லியன் பவுண்டு தியாகம் செய்யும் நற்பாக்கியம் ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. அல்லாஹ்வின் அருளால் இந்த வசூல் கடந்த ஆண்டை விட 8 இலட்சத்து 2 ஆயிரம் பவுண்டு அதிகமாகும். அரசியல் மற்றும் சமூகக் கேடுகளின் காரணமாக இவ்வருடம் பாகிஸ்தானின் கரன்ஸி மதிப்பு குறைந்து விட்டது. அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக.

பாகிஸ்தானுக்காக துஆ செய்யுங்கள். அங்கு அஹ்மதிகள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. இப்போதுள்ள நிலை எப்போதும் இருந்ததில்லை. முதல் நிலையை முழுமையாக ஜெர்மனி பெற்றுள்ளது. ஜெர்மனிக்குப் பிறகு இரண்டாமிடம் பாகிஸ்தான். பிறகு பிரிட்டன். முதலில் பாகிஸ்தானை நீக்கி விட்டுக் கூறுவது வழக்கம். முதலிடம் அது பெறும். பாகிஸ்தான் தவிர மற்ற நாடுகளை எடுத்துக் கூறுவேன். எனவே பாகிஸ்தான் தவிர இது இரண்டாம் இடத்தில் இருந்தாலும் 10 நகரங்களின் விபரம் கூறுவேன். முதலில் ஜெர்மனி. பெரிய ஜமாஅத்துகள் உள்ள நாடுகளில் பாகிஸ்தானுக்குப் பிறகு இரண்டாவது பிரிட்டன். பிறகு அமெரிக்கா, கனடா, இந்தியா, மத்தியக் கிழக்கு நாட்டின் ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, கானா, மத்தியக் கிழக்கு நாடுகளில் ஒன்று.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இதை விடக் குறைந்ததை நான் நாடியவருக்கு மன்னிப்பான். (4:117)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

தனி நபர் வழங்குதலின்படி முதல் மூன்று நாடுகள் முறையே சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர் பிறகு நான்காவது பிரிட்டன், ஐந்தாவது சுவீடன், பிறகு மற்ற நாடுகள்.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒட்டுமொத்த வசூலின்படி கவனிக்கத்தக்க ஜமாஅத்துகள் முறையே கானா, நைஜீரியா, புர்கினோஃபாஸோ, தன்ஸானியா, கேம்பியா, பெனின்.

சந்தாவில் பங்கு பெறுபவர்களை அதிகமாக்குவதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. கடந்த சில வருடங்களாக அதிகரிக்குமாறு கூறப்பட்டது. இதற்காக, தொகையை விட அதிகமாக கலந்து கொள்பவர்களை அதிகரிக்குமாறு இலக்கு தரப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை 18 இலட்சத்து 27 ஆயிரத்தை விட அதிகமாகும். மேலும் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் பேர் புதிதான சேர்ந்தவர்கள் சந்தா அமைப்பில் இணைந்துள்ளனர். கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கவனிக்கத்தக்க ஆப்பிரிக்க நாடுகள் முறையே நைஜீரியா, செராலியோன், நைஜீரியா, கேமரூன், பெனின், செனிகால், கினிபஸாவ், ஐவரிகோஸ்ட், தன்ஸானியா, கினிகனாரி ஆகும்.

பெரிய ஜமாஅத்துகள் முறையே பங்களாதேஷ், கனடா, மலேசியா, இந்தியா, இந்தோனேஷியா, ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகும்.

முதல் ஏட்டில் தலைமையக பதிவுக்கேற்ப 5 ஆயிரத்து 927 பேர். இதில் 36 பேர் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் உள்ளனர். அவர்கள் தாமே தமது சந்தாவை வழங்குகின்றனர். மற்றவர்கள் வஃபாத் ஆகி விட்டனர். அவர்களின் ஏட்டை வாரிசுகள் மற்றும் ஜமாஅத்தின் களங்கமற்ற மக்கள் தொடரச் செய்திருக்கிறார்கள்.

ஜெர்மனி முதலிடம். அதன் முதல் 10 ஜமாஅத்துகள் முறையே ருயிடர்மார்க், நூயிஸ், பெனின்பெர்க், மஹ்தியாபாத், வதா, ஆன்ஸாபெர்க், உருதுவில் எழுதப்பட்டுள்ளது. சில எழுத்துக்களை படிக்காமல் இருக்க வாய்ப்புண்டு. கேல், புளவரன்ஸ், ஹாஸிம், வாயின் கார்டன், கோலோன் ஆகியவை.

உள்ளூர் இமாரத்துகளில் முதல் பத்து இடம் பிடித்தவை முறையே ஹெம்பர்க் முதலிடம். பிறகு பிராங்க்போர்ட், கிராஸ் கிராவ், மார்மில்டன், டான்ஸன்பாக், வீஸ்பதன், ரிஜிஸ்டட், டாம்ஸ்டட், மன்ஹைம், அசல் ஆகியவை.

பாகிஸ்தானில் தஹ்ரீகே ஜதீது தியாகத்தில் வசூலின் அடிப்படையில் முதலிடம் லாஹூர், பிறகு ரப்வா, பிறகு கராச்சி ஆகியவை.

மாவட்ட அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள் முறையே இஸ்லாமாபாத், ஸியால்கோட், பைஸலாபாத், குஜ்ரான்வாலா, உமர்கோட், ஹைதரபாத், மீர்புர்காஸ், கஸூர்டுபா, டீக் சங்க் மீர்புர், ஆஸாத் காஷ்மீர்.

வசூலின் அடிப்படையில் பாகிஸ்தானில் அதிகம் தியாகம் செய்த நகர்ப்புற ஜமாஅத்துகள் முறையே இமாரத் டெபன்ஸ் லாஹூர், டவுண்ஷிப் லாஹூர், அமாரத் கேண்ட் ராவல்பிண்டி, இமாரத் ராவல்பிண்டி நகர், முல்தான், இமாரத் அஸீஸாபாத் கராச்சி இமாரத், டெல்லிகேட் லாஹூர், கொயிட்டா, பெஷாவர், பஹாவலன் கைர்.

பாகிஸ்தானின் சிறிய ஐந்து ஜமாஅத்துகள் முறையே வாஹ்கெண்ட், சாபன்தஸ்தி, கோகர் கர்பி, ஜக்னூபுன்யார் மற்றும் ஜூண்டா.

பிரிட்டனின் முதல் ஐந்து மண்டலங்கள் முறையே பைத்துல் ஃபுதூஹ், மஸ்ஜிது ஃபஸ்ல், மிட்லேண்ட்ஸ், பைத்துல் இஹ்ஸான், இஸ்லாமாபாத்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டனின் பத்து ஜமாஅத்துகள் முறையே மஸ்ஜிது ஃபஸ்ல், பார்க், இஸ்லாமாபாத், அல்ட்ரா ஸார்ட் பட்னி, நியூமால்டன், ஜல்னாகம், பர்மின்காம் வெஸ்ட், கிளாஸ்கோ மற்றும் ஸகன்தால்.

சிறிய ஜமாஅத்துகளில் முறையே சவான்லி, பேபர்ஸபன்வெளி, கேத்ஸே நார்த், நீவல் மற்றும் நார்த் ஹேம்பட்டன்.

வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் ஜமாஅத்துகள் முறையே ஸூலூர், ஸ்பரின்க், லாஸ் ஏஞ்சலஸ், சிலிகோன்வெளி, சென்ட்ரல் வெர்ஜீனியா, டெட்ராய்டு, சிகாகோ ஆஷ்கோஷ், ஹியோஷ்டன் ஜார்ஜியா, சவூத் வெர்ஜீனியா.

கனடாவில் வசூலின் அடிப்படையில் உள்ளூர் இமாரத்துகள் முறையே வான், கேல்கரி, பீஸ் வில்லேஜ், வினிகோவர், மஸீகா, ஸஸ்காடோன்.

சிறிய ஜமாஅத்துகளில் முறையே அட்மிண்டன், பே அட்மிண்டன் வெஸ்ட் டர்ஹம், பரிடோபோர்ட், ஹாமில்டன், ஹாஸ்ட்.

இந்தியாவின் தியாகத்தில் முதல் பத்து ஜமாஅத்துகள் முறையே கருளாயி, காதியான், பத்தபிரியம், ஹைதராபாத், கோயம்புத்தூர், பைங்காடி, பெங்களூர், கோழிக்கோடு, கல்கத்தா, யாத்கீர்.

பத்து மாநிலங்கள் முறையே கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஜம்மு காஷ்மீர், ஒடிஸா, பஞ்சாப், பெங்கால், டெல்லி, உத்திரபிரதேசம்.

காஷ்மீரின் நிலைமை அரசியல் ரீதியாகவும், பொருளாதார அடிப்படையிலும் மிகவும் மோசமாக உள்ளது.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகள் முறையே பேகாஸல்ஹில், மெல்பொர்ன், பெர்த் மெல்பொர்ன், லாங்க் வாரன், ஏஸிடீ கேம்பரா, மாஸ்டன்பார்க், எட்லாய்டு சவூத், பென்வர்த் மவுண்ட், டராய்ட்பர் அமாடா, ஏட்லேடு வெஸ்ட்.

அல்லாஹ் தியாகம் செய்தவர்களின் உயிர்களிலும் பொருள்களிலும் அளவு கடந்த பரக்கத் வழங்குவானாக.

**காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு**

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்—வ—இர்ஷாத் மர்கஸிய்யா)

**எந்தவொரு நாஸிரும் ஐவேளை தொழுகையில் கவனமற்றவராக இருக்கக்கூடாது**

**எவர்கள் கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பார்களோ அவர்களே இறையச்சத்தில் முன்னேற இயலும். எவர்கள் கிலாஃபத்துடனான அன்பிலும், கட்டுப்படுதலிலும் முன்னேறிக் கொண்டிருப்பார்களோ அவர்களே பாவத்திலிருந்து இரட்சிப்பு பெற முடியும்**

**பாருங்கள்! அல்லாஹ்வின் மிகப்பெரும் அருள் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் அருகாமையை பெறுவதற்காக MTA வை அவன் வழங்கியிருக்கின்றான்**

**நீங்கள் அனைத்து ஜுமுஆ குத்பாக்களையும், பல்வேறு தருணங்களில் ஆற்றப்படுகின்ற சொற்பொழிவுகளையும் நேரடியாக கேட்க இயலும்**

**எனவே உங்களையும், உங்களுடைய மனைவி மக்களையும் MTA வுடன் இணைத்திடுங்கள். நீங்கள் செவியேற்கின்ற நல்ல விஷயங்களின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள்**

**2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தேசிய இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி**

இஸ்லாமாபாத் (MA 24.09.2019)

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

உங்களுக்கு இவ்வருடம் உங்களுடைய வருடாந்திர இஜ்திமாவை கொண்டாடுவதற்கான வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். அனைத்து அன்ஸாரும் இந்த அருளுக்குரிய வாய்ப்பிலிருந்து முழுமையாக பயன் பெறுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக. ஆமீன்.

இத்தருணத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இத்தருணத்தில் நான் உங்களுக்கு சில அறிவுரைகளை வழங்க விரும்புகிறேன்.

அல்லாஹ்வின் மிகப்பெரும் அருள் என்னவென்றால், நீங்கள் இக்காலத்தின் இமாம் ஆகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் ஒன்றிணையக்கூடிய வாய்ப்பை பெற்றுள்ளீர்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை தன்னுடைய அன்பிற்குரிய ஜமாஅத்திற்கு இறையச்சத்தில் முன்னேறுமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும் அந்த நோக்கத்தை அடைவதற்காக வழிகாட்டியும் உள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், இறையச்சத்தில் முன்னேறுங்கள். ஒரு ஜமாஅத்தும் அதன் இமாமும் இல்லாத வரை மனிதன் சுயமாக முன்னேற முடியாது. சுயமாக முன்னேறக்கூடிய ஆற்றல் மனிதனிடம் இருக்கும் என்றால் பிறகு நபிமார்களுடைய தேவை கிடையாது. இறையச்சத்தை உருவாக்க எப்படிப்பட்ட மனிதர் பிறக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றால் அவர் ஈர்க்கக் கூடியவராகவும், துஆக்களின் மூலமாக ஆன்மாக்களை பரிசுத்தமாக்குபவராகவும் இருக்க வேண்டும்.

பாருங்கள்! எவ்வளவோ ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள். அதில் எவராவது நல்லடியார்களின் ஜமாஅத்தை உருவாக்கியிருக்கிறார்களா? ஒருபோதும் கிடையாது.

இதற்கான காரணம் என்னவென்றால், அவர்கள் ஈர்க்கக் கூடியவர்களாக இருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு உருவாக்கினார்கள்? விஷயம் என்னவென்றால் எவரை இறைவன் அனுப்பி வைக்கின்றானோ அவருக்குள் ஒரு சஞ்சீவி குணத்தை வைக்கின்றான். ஆகவே எவர் அவருடன் அன்பு மற்றும் கட்டுப்படுதில் முன்னேறுகிறாரோ அந்த நபருடைய பாவத்தின் விஷயம் அவருடைய சஞ்சீவி குணத்தின் காரணமாக நீங்கி விடுகிறது. மேலும் அருளின் தூறல் அவர் மீதும் விழுகின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 626,627)

ஆகவே அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் மற்றும் தனது அன்பிற்குரிய மஸீஹ், மஹ்தியை அனுப்பியுள்ளான். பிறகு அவருடைய பிரதிநிதித்துவத்தில் கலீஃபாக்களின் நிரந்தமான தொடரையும் தொடரச் செய்துள்ளான். எவர்கள் கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பார்களோ அவர்களே இறையச்சத்தில் முன்னேற இயலும். எவர்கள் கிலாஃபத்துடனான அன்பிலும், கட்டுப்படுதலிலும் முன்னேறிக் கொண்டிருப்பார்களோ அவர்களே பாவத்திலிருந்து இரட்சிப்பு பெற முடியும். பாருங்கள்! அல்லாஹ்வின் மிகப்பெரும் அருள் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் அருகாமையை பெறுவதற்காக MTA வை அவன் வழங்கியிருக்கின்றான். நீங்கள் அனைத்து ஜுமுஆ குத்பாக்களையும், பல்வேறு தருணங்களில் ஆற்றப்படுகின்ற சொற்பொழிவுகளையும் நேரடியாக கேட்க இயலும்.

எனவே உங்களையும், உங்களுடைய மனைவி மக்களையும் MTA வுடன் இணைத்திடுங்கள். நீங்கள் செவியேற்கின்ற நல்ல விஷயங்களின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இதர மார்க்கங்களின் மீது இஸ்லாம் வெற்றி பெற வேண்டும் என்றும் முழு உலகமும் ஒரே உடலைப்போன்று ஆகிவிட வேண்டும் என்றும் அல்லாஹ் இக்காலத்தில் விரும்பியதற்கேற்ப இந்த ஒற்றுமையின் சரடில் நீங்களும் இணைந்திருங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘‘ஐரோப்பா, ஆசியா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு வசிப்பிடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகின்றான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். இதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகில் அனுப்பப்பட்டுள்ளேன்.’’

(ரிஸாலா அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 307,308)

ஆகவே கிலாஃபத் எனும் அல்லாஹ்வின் கயிற்றை எப்போதும் உறுதியுடன் பிடித்திருங்கள். கிலாஃபத்துடன் இபாதத்திற்கு (இறைவணக்கத்திற்கு) ஆழமான தொடர்பு உண்டு என்பதையும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இபாதத் என்றால் என்ன? தொழுகையே ஆகும். நம்பிக்கை கொண்டவர்களுடன் மன அமைதி மற்றும் கிலாஃபத்திற்கான வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ள

ஆயத்திற்கு அடுத்த வசனத்தில் தொழுகையை நிலைநாட்டுவதற்காக கட்டளையும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மன அமைதி பெறுவதற்கும் கிலாஃபத் அமைப்பிலிருந்து அருள் பெறுவதற்கும் முதல் நிபந்தனை தொழுகையை நிலைநாட்டுவதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“தொழுகையை விட பெரிய உதவித்தொகை வேறொன்றும் கிடையாது. ஏனென்றால் அதில் இறை புகழ் உள்ளது. பாவமன்னிப்பு உள்ளது. தரூது ஷரீஃப் உள்ளது. அனைத்து உதவிகளும் அதன் ஒருங்கிணைப்பும் இந்த தொழுகையே ஆகும். இதன் மூலம் எல்லாவித துக்கங்களும், துயரங்களும் நீங்கி விடுகின்றன. கஷ்டங்கள் தீர்வு காணப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது சிறிய துக்கம் ஏற்பட்டால் கூட அன்னார் தொழுகையை மேற்கொள்வார்கள்.

எனவேதான் أَلَا بِذِكْرِ اللّٰهِ تَطْمَئِنُّ الْقُلُوْبُ என்று கூறியுள்ளார்கள். அதாவது மன நிம்மதிக்கும், மன அமைதிக்கும் தொழுகையை விட வேறு வழி ஒன்றும் இல்லை.” (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 310,311)

தொழுகை ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆனிலும் ஹதீஸுகளிலும் தொழுகையைப் பற்றி அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு நாஸிரும் ஐவேளை தொழுகையில் கவனமற்றவராக இருக்கக்கூடாது. அல்லாஹ் செயல் சீர்திருத்தத்தை விரும்புகின்றான். இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் கவனத்தில் கொள்பவர்களுக்கு மிகச்சிறந்த நற்கூலியை இறைவன் வழங்குகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இறைவன் உங்களுடன் இருப்பதற்கு செயல் நல்லொழுக்கத்தை காட்டுங்கள். கருணை, நல்லொழுக்கம், அனுதாபம், நற்செயல், இரக்கம் மற்றும் பணிவு ஆகியவற்றில் குறை வைப்பீர்கள் என்றால் என்னவாகும் என்று எனக்குத் தெரியும். மேலும் நான் பலமுறை இதுபற்றி கூறியிருக்கிறேன். இவ்வாறான ஜமாஅத்துதான் முதலில் அழிந்து போகும். மூஸா (அலை) அவர்களுடைய காலத்தில் அவருடைய சமுதாயத்தினர் இறை கட்டளைகளுக்கு கண்ணியமளிக்காதபோது, மூஸா (அலை) அவர்கள் அம்மக்களிடையே இருந்தபோதிலும் அம்மக்கள் மின்னலைக் கொண்டு அழிக்கப்பட்டனர்.” (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 112)

ஒவ்வொரு வருடமும் இஜ்திமாவிற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நேசத்திற்குரிய ஊரில் ஒன்று கூடக்கூடிய நீங்கள் நற்பேறு பெற்றவர்களாவீர்கள். இது மிகவும் அருளுக்குரிய தருணமாகும். இதை துஆக்களுடனும், இறை நினைவுடனும் கழியுங்கள். அல்லாஹ்வுடைய அதிகமான அருள்களை பெற்றுக் கொண்டு உங்களுடைய வீடுகளுக்கு திரும்புங்கள். மேலும் இந்த நல்ல தாக்கங்களை நீண்ட காலம் வரை உங்களுக்குள் நிலை பெறச் செய்யுங்கள்.

அல்லாஹ் உங்களுக்கு இந்த அனைத்து அறிவுரைகளின்படியும் செயல்படும் வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்

வஸ்ஸலாம் எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

---

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

(2) எனக்கு திருக்குர்ஆனின் தத்துவம் மற்றும் நுட்பமான ஞானம் ஆகியவற்றை எடுத்துரைப்பதில் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் யாராலும் என்னுடன் போட்டி போட முடியாது.

(3) எனக்கு அதிகமாக துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அடையாளங்கள் வழங்கப்பட்டுள்ளது. யாராலும் இதனை எதிர்க்க முடியாது. எனது ஏறக்குறைய முப்பதாயிரம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று என்னால் சத்தியம் செய்து கூற முடியும். இதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது.

(4) எனக்கு மறைவான செய்திகளை முன்னறிவிப்பதன் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. யாராலும் இதனை எதிர்க்க முடியாது. இதற்கு இறைவனின் சாட்சிகள் என்னிடம் உள்ளன. மேலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் எனக்கு ஆதரவாக ஒளிமிக்க அடையாளங்களைப் போன்று நிறைவேறியுள்ளன. (ஸரூரத்துல் இமாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 495)

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றவர்களை நாம் நிச்சயமாக கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்களில் நுழையச் செய்வோம். (அவர்கள்) அவற்றில் என்றென்றும் வாழ்ந்து வருவர். அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. அல்லாஹ்வை விட சொல்லில் மிக உண்மையானவன் எவன்? (4:123)

M.Y. Shahul Hameed, Melapalayam

## திருக்குர்ஆனிலிருந்து...

(ஷைத்தானாகிய) அவன் அவர்களிடம் வாக்குறுதிகளைக் கொடுத்து அவர்களுக்கு வீண் ஆசைகளை உண்டாக்குகின்றான். ஷைத்தான் ஏமாற்றத்தை தவிர (வேறெதனையும்) அவர்களிடம் வாக்களிப்பதில்லை. (4:121)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒருவர் தீமை செய்யவோ, தமக்குத்தாமே தீங்கிழைக்கவோ செய்த பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோரினால், அவர் அல்லாஹ்வை மிக்க மன்னிப்போனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகக் காண்பார். (4:111)

A.Basheer Ahmad, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 12 December 2019 Issue No. 50

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**இந்த காலத்தின் இமாம் நான் ஆவேன். என்னிடம் இறைவன் அனைத்து அடையாளங்களையும், அனைத்து நிபந்தனைகளையும் ஒன்று சேர்த்துள்ளான். மேலும் இந்த நூற்றாண்டின் துவக்கதில் என்னை அனுப்பியுள்ளான். அதில் பதினைந்து வருட காலம் கழிந்தும் விட்டது. நான் ஆன்மீக ரீதியில் சிலுவையை உடைப்பதற்காகவும், கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்**

இக்காலகட்டத்திற்கான இமாம் யார்? என்ற கேள்வி எஞ்சியுள்ளது. மேலும் எவரைப் பின்பற்றுவது எல்லா சாமானிய முஸ்லிம்கள், சான்றோர்கள், நல்ல கனவு காண்பவர்கள், இறையறிவிப்புப் பெறக் கூடியவர்கள் ஆகியோருக்கு இறைவன் புறமிருந்து கடமையாக்கப்பட்டுள்ளதோ அவர் யார்?

ஆகவே நான் இப்போது சற்றும் தாமதிக்காமல் கூறுகிறேன். இறைவன் அருளால் இந்த காலத்தின் இமாம் நான் ஆவேன். என்னிடம் இறைவன் எல்லா அடையாளங்களையும் அனைத்து நிபந்தனைகளையும் ஒன்று சேர்த்துள்ளான். மேலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்கதில் என்னை அனுப்பியுள்ளான். அதில் பதினைந்து வருட காலம் கழிந்தும் விட்டன. இஸ்லாத்தின் கொள்கைகள் எல்லாம் கருத்து வேறுபாடுகளால் நிறைந்து விட்டது. கருத்து வேற்றுமை காணப்படாத எந்தக் கொள்கையுமில்லை. இப்படிப்பட்ட காலத்தில்தான் நான் தோன்றியுள்ளேன்.

அவ்வாறே மஸீஹின் வருகை குறித்தும் மிகவும் தவறான சிந்தனை பரவி விட்டது. இந்த கொள்கையிலும் கருத்து வேறுபாட்டின் நிலை எப்படி இருக்கிறதென்றால் சிலர் ஹஸ்ரத் ஈஸா உயிருடன் இருப்பதாக நம்புகின்றனர். இன்னும் சிலர் இறந்து விட்டதாக நம்புகின்றனர். வேறு சிலர் அவர் உயிருடனும் உடலுடனும் மீண்டும் இறங்கி வருவார் என்கின்றனர். இன்னும் சிலர் அவர் தத்துவ வடிவில் தோன்றுவார் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர். சிலர் மக்காவிலும், சிலர் பைத்துல் முகத்திஸிலும், சிலர் இஸ்லாமிய படையிலும் இறங்குவார் என்றும் சிலர் இந்தியாவில் இறங்குவார் என்றும் கூறுகின்றனர்.

ஆகவே இந்த அனைத்து முரண்பட்ட கருத்துக்களும் கருத்து வேற்றுமைகளும் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவர் ஒருவரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஆகவே அந்த நீதிபதி நானாவேன். நான் ஆன்மீக அடிப்படையில் சிலுவையை உடைப்பதற்காகவும், கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். நான் அனுப்பப்பட்டது இவ்விரண்டு அம்சங்களின் எதிர்பார்ப்பாகும். எனது உண்மைத்துவத்திற்கு ஆதாரமாக இன்னும் வேறு சான்றுகளை வழங்குவதற்கு எனக்கு எந்த தேவையுமில்லை.

ஏனெனில் காலத்தின் அவசியமே ஓர் அத்தாட்சியாகும். இருந்தாலும் எனக்கு ஆதரவாக இறைவன் இன்னும் பல அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். நான் பிற கருத்து வேறுபாடுகளில் நீதியுடன் தீர்ப்பு வழங்குவதற்கு நீதிபதியாக விளங்குவதனைப் போன்று (மஸீஹின்) மரணம் மற்றும் உயிருடன் இருத்தல் ஆகிய பிரச்சனையிலும் நீதிபதியாக இருக்கின்றேன். நான் இமாம் மாலிக், இப்னு ஹாஷிம் மற்றும் முஃதஸீலா போன்றோர் மஸீஹின் மரணம் தொடர்பாக கூறிய கூற்றை சரியானது என்று தீர்ப்பு வழங்குகின்றேன். மேலும் அஹ்லே சுன்னத் போன்ற பிரிவுகள் தவறான கருத்தில் இருக்கின்றனர் என்று நம்புகின்றேன்.

ஆகவே நான் நீதியுடன் தீர்ப்பு வழங்குவேன் என்ற அடிப்படையில் சண்டையிடுகின்ற இந்த மக்களுக்கு தீர்ப்பு வழங்குகின்றேன். நுஸூல் – இறங்குதல் என்பதன் அடிப்படையில் பொருள் ரீதியாக இந்த அஹ்லே சுன்னத் பிரிவினர்கள் உண்மையாளர்கள் ஆவர். ஏனெனில் மஸீஹ் உவமை வடிவில் இறங்குவது அவசியமாக இருந்தது. ஆனால் இறங்குவதன் நிலையை எடுத்து வைப்பதில் இம்மக்கள் தவறிழைத்துள்ளனர். உவமை அடிப்படையில் தான் இறங்குதல் அமையுமே தவிர உண்மையில் இறங்குதல் அல்ல. மஸீஹின் மரணம் சம்பந்தமாக முஃதஸிலா, இமாம் மாலிக் மற்றும் இப்னு ஹிஷாம் போன்றோர் ஒருமித்த கருத்தைதான் கூறுகின்றனர். இவர்கள் உண்மையாளர்களாவர்.

ஏனெனில் திருக்குர்ஆன் திட்டவட்டமான ஆதாரத்தின்படி அதாவது 'ஃபலம்மா தவஃப்பைதனீ' என்ற வசனத்தின்படி கிறித்தவர்கள் வழிகெட்டுப் போவற்கு முன் மஸீஹ் மரணித்திருப்பது அவசியமாகும். இது என் சார்பாக ஹகம் – நீதிபதி என்ற அடிப்படையில் நான் வழங்கும் தீர்ப்பாகும். இப்போது எவர் எனது தீர்ப்பை ஏற்க மறுக்கின்றாரோ அவர் உண்மையில் என்னை நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக அனுப்பிய அந்த இறைவனை ஏற்க மறுக்கின்றார்.

நீர் தான் ஹகம் – நெறி நீதி தீர்ப்பவர் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேள்வி எழுப்பினால் அதற்குரிய பதிலாவது நீதியுடன் தீர்ப்பு வழங்குபவர் வரவேண்டிய காலகட்டம் இதுவாகும். மேலும் சிலுவையினால் தவறிழைத்த சீர்திருத்தப்பட வேண்டிய சமுதாயம் இப்போது இருக்கின்றது. மேலும் இவர்தான் ஹகம்– நெறி நீதி தீர்ப்பவர் என்று சாட்சியம் வழங்கப்பட்டிருந்த அந்த அடையாளமும் நிறைவேறி விட்டது. இன்னும் அடையாளங்களின் தொடர்ச்சி தொடர்ந்து வருகின்றது. வானம் அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. எவருடைய கண்கள் இப்போது மூடாமல் இருக்குமோ அவரே அருளுக்குரியவர் ஆவார்.

முந்தைய அடையாளங்களை மட்டும் நம்புங்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, நான் ஹகமாக (நெறி நீதி தீர்ப்பவராக) இல்லை என்று நீங்கள் நம்புவதாக இருந்தால் பிறகு என் அடையாளங்களுடன் போட்டியிட்டுப் பாருங்கள். கொள்கை முரண்பாடுகள் உள்ள இக்காலகட்டத்தில் தோன்றியுள்ள எனக்கு எதிரில் மற்ற எல்லா விவாதங்களும் ஒன்றுமற்றவையாகும். நீதிபதி என்ற அடிப்படையில் எனது கூற்றிற்கு செவிமடுப்பதுதான் அனைவரின் கடமையாகும். அதனை நான் முழுமை செய்து விட்டேன். இறைவன் எனக்கு நான்கு அடையாளங்களை வழங்கியுள்ளான்.

**(1)** எனக்குத் திருக்குர்ஆனின் அற்புதங்களின் ஒளியில் அரபி மொழியில் புலமை மற்றும் சொற்செறிவு, பொருட்செறிவு ஆகியவற்றின் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் யாராலும் என்னுடன் போட்டியிட முடியாது.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad